DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

............

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE AT PALLIPATTU

Calendar

Miscellaneous

Preliminary Register Case No.C.C. 174 of 2025 PW :1

Sessions

Prosecution

Deposition of witness for Defence

Court

Name : திரு. கோவிந்தராஜீலு

Father's Name : திரு. சுப்பிரமணியம்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age : 52

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 06.03.2026.

**தேதி.06.03.2026 ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 174/2025, அ.த.சா.1 திரு.கோவிந்தராஜீலு த/பெ. திரு. சுப்பிரமணியன் வயது 52 அவர்களை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செயய்ய அனுமதிக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

கெண்டவாரிகுப்பம் கிராமம் சர்வே எண் 182/5 ல் 43 சென்ட் நாராயண சாமி போய்டு என் தாத்தா பெயரில் நிலம் இருந்தது. நாராயண சாமி போய்டுவிற்கு 2 மகன்கள் அவர்களில் ஒருவர் வீராசாமிபோய்டு மற்றொருவர் கரிசாமிபோய்டு. 43 சென்ட் நிலத்தில் 22 சென்ட் நிலத்தை கரிமுனுசாமி போய்டு மகன்கள் பெத்தப்ப போய்டும் மற்றும் ரோசம்மாளுக்கு செட்டில் மென்ட் பத்திரம் மூலம் 22 சென்ட் நிலத்தை எழுதி கொடுத்தார். 20/11/1968 ன் என்னிடம் காட்டப்படும் செட்டில் மென்ட் பத்திரம் தான். **இந்த பத்திரத்தின் சான்றிட்ட நகல் அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வீராசாமி எனது தாத்தா காலமாகிவிட்டதால் 21 சென்ட் நிலத்தை அப்படியே இருந்து. 1972 ம் வருடம் கிருஷ்டப்ப முதலியாருக்கு என் அப்பா சுப்பிரமணி போய்டுவின் பாகம் 21 சென்ட்டும் பெத்தப்ப போய்டுவின் 22 சென்ட்டும் சேர்ந்து மொத்தம் 43 சென்ட் நிலத்தை அடமானம் வைத்தனர். **என்னிடம் காட்டப்படும் ஆவண எண் 440/1972 ஆவணமானது அ.த.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 20/11/1968 தேதியிட்ட செட்டில் மென்ட் ஆவணத்தின் அடிப்படையில் பெத்தப்ப போய்டு அவருடைய பெயரில் பட்டா எண் 503 ஆகும். 503 என் கொண்ட பட்டாவின் சான்றிட்ட நகல் **அ.த.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என் தகப்பனார் சுப்பிரமணி போய்டு மற்றும் பெத்தப்ப போய்டு இருவரும் சேர்ந்து கிருஷ்டப்ப முதலியாருக்கு செய்து கொடுத்த அடமானத்தை மீட்டுக்கொண்டனர். பின்னர் பெத்தப்ப போய்டு அவர் பெயரில் இருந்த 22 சென்ட்ல் இருந்து தாமோதரன் 21/01/2004 ஆவண எண் 49/2004 ன் படி 1600 சதுர அடியை கிரய ஆவணத்தை ஏற்படுத்தி கொடுத்துள்ளார். 21/01/2004 ஆவண எண் 49/2004 ஆவணத்தின் சான்றிட்ட நகல்

**அ.த.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என் தகப்பனார் சுப்பிரமணி எங்கள் பாகமான 21 செனட் நிலத்தை என் பெயரிலும் கோவிந்தராஜீ பெயரிலும் செட்டில்மென்ட் ஆவணமாக 19/02/2013 அன்று ஆவண எண் 201/2013 ன் மூலம் என் பெயரில் எழுதி கொடுத்தார். இந்த செட்டில்மென்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் **அ.த.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பெத்தப்ப போய்டு என் பாகமான 21 சென்ட் நிலத்தையும் சேர்த்து 43 சென்ட் நிலத்தை பெத்தப்ப போய்டு மகன் கேசவனுக்கு ஆவண எண் 1450/2014 நாள் 03/11/2014 அன்று செட்டில்மென்ட் ஆவணத்தை எழுதினார். 03/11/2014 தேதியிட்ட ஆவண எண் 1450/2014 ஆவணத்தின் சான்றிட்ட நகல் **அ.த.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என் பெயரில் உள்ள என்னுடைய பாகமான 21 சென்ட் நிலத்தையும் என்னையும் மோசடி செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் போலி ஆவணம் தயார் செய்து தன் மகனுக்கு ஆவணங்களை ஏற்படுத்தி கொடுத்த எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கும் படி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான் **அந்த புகார் மனு அ.த.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**(எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**

**ஒப்பம்/–A. தரணிதரன்,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,**

**பள்ளிப்பட்டு**